ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2256/39 - 2021 දෙසැම්බර් මස 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.12.02

*2256/39 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் முறையே 44(1), 45(1) மற்றும் 47 (1) (அ) (ஆ) ஆம் உறுப்புரைகளுக்கமைய, எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால் 2020, ஓகத்து மாதம் 09 ஆந் திகதிய 2187/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலானது, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டு, 2021, திசெம்பர் மாதம் 02 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகிறது என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**கோட்டாபய ராஜபக்ஷ,**
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2021, திசெம்பர் 02.

1A - G 35293 — 370 (2021/12)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(1) அவ்வறிவித்தலில் "சனாதிபதி அலுவலகம் - தேசிய முன்னுரிமை நிகழ்ச்சித்திட்டம் " எனும் தலைப்பின் கீழுள்ள "04. தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்" தொடர்பில் பின்வருமாறு:-

**04 தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| நிறுவனங்கள்/சபைகள் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. இலங்கை முதலீட்டுச் சபை<br>2. கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு<br>3. பாதுகாப்பான நாடு, ஒழுக்கப் பண்புமிக்க, குணநெறிமிக்க சட்டத்தை மதிக்கும் சமூகத்தினை கட்டியெழுப்புவதற்கான சனாதிபதி செயலணி<br>4. கொவிட் 19 அமைச்சுக்களின் செயலணி<br>5. கிழக்கு மாகாணத்தினுள் தொல்பொருள் மரபுரிமையை முகாமை செய்வதற்கான சனாதிபதி செயலணி<br>6. இலங்கை கல்வி நடவடிக்கைகள் தொடர்பான சனாதிபதி செயலணி<br>7. காலநிலை மாற்றங்களுக்காக நிலையான தீர்வுகளுடன்கூடிய பசுமையான இலங்கையை உருவாக்கும் சனாதிபதி செயலணி<br>8. பசுமை விவசாயம் பற்றிய சனாதிபதி செயலணி<br>9. ஒரே நாடு, ஒரே சட்டம் என்பதற்கான சனாதிபதி செயலணி | • (1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுச்சட்டம் (முதலீட்டுச்சபைச் சட்டம்)<br>• (2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க ) கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக் குழுச் சட்டம் |

(2) அவ்வறிவித்தலில் இல. "6.0 நிதி அமைச்சர்" என்ற தலைப்பின் கீழுள்ள "03 அதிவிசேட முன்னுரிமைகள் "03. அதிவிசேட முன்னுரிமைகள்" தொடர்பில் பின்வருமாறு:-

**03. அதிவிசேட முன்னுரிமைகள்**

1. அனைவருக்கும் நலன் கிடைக்கின்றதும் அனைத்து மாகாணங்கள் உள்ளடங்கும் வருமானம் முரண்பாடுகள் தணிக்கப்படுகின்றதுமான நிலைபேறான உயர்மட்ட பொருளாதார அபிவிருத்தி வளர்ச்சி வேகத்தை ஏற்படுத்திக்கொள்ளல்.

2. குறைந்த வருமானம் பெறுவோருக்கு முன்னுரிமை வழங்கி தொழிலின்மையைக் குறைத்துக் கொள்ளலும் தனிநபர் வருமானத்தைக் கூட்டிக் கொள்ளலும்.

3. வருடாந்த சராசரி பணவீக்க வீதத்தை குறைந்த மட்டத்தில் வைத்துக் கொள்வதன் மூலம் விலைகளின் நிலைப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளல்.

4. வரவுசெலவு பற்றாக்குறை மற்றும் அரச கடன்களைக் குறைத்துக்கொள்வதன் மூலம் அரச வருமானக் கொள்கைகளில் நிச்சயமின்மையைக் குறைத்தல்.

5. கடன் வட்டிவீதங்களைக் குறைந்த மட்டத்தில் பேணுதலின் ஊடாக நிதி வள பொருளாதாரத் தேவைகளை விரிவாக்கல்.

6. ரூபாவின் பெறுமதி நிலைப்பாடு உறுதியுறும் வகையில் நிதி மற்றும் கொடுப்பனவு ஐந்தொகை கொள்கைகளையும் வட்டி வீதத்தையும் திடமாக்கிக் கொள்ளுதல்.

7. உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்தல், குறைந்த வருமானம் பெறுபவர்களை வலுப்படுத்தல், முதலீட்டு ஊக்குவிப்புக்குத் தேவையான வழிகளை அறிமுகப்படுத்தல்.

8. பொதுமக்களுக்குப் பயன்கிடைக்குமாறு தேசிய வியாபார சமூகத்துக்குத் தேவையான வர்த்தகச் சூழலை விரிவாக்கல்.

9. அரச தொழில் முயற்சிகளைப் பலப்படுத்துதல்.

10. அரச வருமானங்கள் மற்றும் செலவு முகாமையை வினைத்திறமைப்படுத்துவதற்குத் தேவையான தபானக் கட்டமைப்பை வலுப்படுத்தல்.

11. சேமிப்பு மற்றும் முதலீட்டை ஊக்குவிக்கும் விதத்தில் வங்கிகள், நிதி நிறுவனங்களை வலுப்படுத்தும் சீர்திருத்தங்களை செயற்படுத்தல்.

12. வீழ்ச்சியடைந்துள்ள நிதி நிறுவனங்கள், தொழில்கள் என்பவற்றை மீளக்கட்டியெழுப்புவதற்குத் தேவையான நிறுவனச் சீரமைப்பைச் செயற்படுத்துதல்.

13. விவசாயம், நிர்மாணத்துறை, தகவல் தொழில்நுட்பக் கைத்தொழில், சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்கள், சுற்றுலா மற்றும் ஏற்றுமதி போன்ற பிரிவுகளை மேம்படுத்துவதற்காகத் தேசிய அபிவிருத்தி நிதி மற்றும் மூலதனச் சந்தை நிகழ்ச்சித்திட்டங்களைக் கூட்டிணைத்து விரிவாக்குதல்.

14. அரச பிணைமுறி மூலம் பங்குச் சந்தையை கவரச்செய்தல்.

15. திறைசேரி உண்டியல் மற்றும் பிணைமுறி ஆரம்ப விற்பனைச் சந்தை மறுசீரமைப்பு மற்றும் ஒழுங்குறுத்தல் நடடிக்கைகளை வலுப்படுத்துதல்.

16. சர்வதேச தேசிய வர்த்தகப் பிரமுகர்களினது (International Business Giants) வர்த்தக நிறுவனங்களின் பிரதான அலுவலகங்களை கொழும்பு மற்றும் துறைமுக நகரத்தை அணடிய பிரதேசத்தில் தாபிப்பதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.

17. வெளிநாட்டு முதலீட்டாளர்களை இந்நாட்டுக்கு வரவழைத்துக் கொள்வதற்காக தனியார் பிரிவினதும் உதவியோடு சுபீட்சத்தின் நோக்கு புதிய பொருளாதாரத் திட்டத்தை மேம்படுத்துவதற்காக சர்வதேச பிரசார வேலைத்திட்டமொன்றைச் செயற்படுத்துதல்.

18. பாரிய அளவிலான தேசிய முதலீட்டாளர்களுக்கு அதிதொழில்நுட்ப உற்பத்திகளைப் (High Technology products) புதிதாக ஆரம்பிப்பதற்குத் தேவையான சகல வசதிகளையும் வழங்குதல்.

19. தேசிய வர்த்தகர்களுக்குப் போட்டிகரமாக வியாபாரத்துறைகளில் ஈடுபடக் கூடியதாக வெளிநாட்டு முதலீடுகளை ஒழுங்குறுத்தி உள்ளூர் வியாபாரிகளைப் பாதுகாத்து, வலுவூட்டுவதற்கான விசேட நிகழ்ச்சித்திட்டமொன்றைச் செயற்படுத்தல்.

20. அரச தொழல் முயற்சிகள் பொருளாதாரம் மற்றும் சமூகரீதியில் தேசிய பொருளாதாரத்தில் செய்யப்படும் பங்களிப்பை வலுப்படுத்துவதற்குத் தேவையான சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தி அவற்றின் நிதிப்பலத்தை அதிகரித்தல்.

21. பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமையை ஒழிப்பதற்கான சனாதிபதி செயலணியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சகல பணிகளையும் மேற்கொள்ளுதல்.

(3) அவ்வறிவிதலில் இல. "7.0 நீதி அமைச்சர்" எனும் தலைப்பின் கீழுள்ள "04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்" தொடர்பில் பின்வருமாறு.

**04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. சட்டமா அதிபர் திணைக்களம்<br>2. சட்ட வரைஞர் திணைக்களம்<br>3. கடன் நிவாரண சபைத் திணைக்களம்<br>4. அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம்<br>5. உயர்நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம்<br>6. இலங்கை சட்ட ஆணைக்குழு<br>7. உயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி முகாமைச் சபை<br>8. இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு<br>9. மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு<br>10. சட்டக் கல்விச் சபை<br>11. இலங்கை வாணிப மத்தியஸ்த நிலையம்<br>12. ஸ்ரீ லங்கா இன்டநஷனல் ஆர்பிடேஷன் சென்ரர் (கரன்டி) லிமிட்டெட்<br>13. தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகம்<br>14. காணாமல்போனோர் ஆட்கள் பற்றிய அலுவலகம்<br>15. இழப்பீட்டுக்கான அலுவலகம்<br>16. பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்களைப் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை | • (1987 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க உயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி முகாமை சபைச் சட்டம்)<br>• (2001 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க) சர்வதேச சிறுவர் கடத்தலின் குடியியல் துறைகளுக்குரிய சமவாயச் சட்டம்<br>• (1974 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க சட்ட கல்விச் சபைச் சட்டம்)<br>• (1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க) கடன் நிவாரணச் சபைச் சட்டளைச் சட்டம்<br>• (1956 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க) வெளிநாட்டு வழங்குத் தீர்ப்புக்களை வலுப்படுத்தல் கட்டளைச் சட்டம்<br>• (1988 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க) அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் (பண்டங்களை அகற்றுதல்) சட்டம்<br>• (1990 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) மாகாண மேல்நீதிமன்ற (விசேட ஏற்பாடுகள்) சட்டம்<br>• (1978 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) கூட்டுத்தாபன வழக்குரைஞர் நிறுவகச் சட்டம்<br>• (1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க) நீதித்துறை ஏற்பாட்டுச் சட்டம்<br>• (1961 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க) நீதிமன்ற மொழிச் சட்டம்<br>• இலங்கை நீதியரசர்களின் நிறுவகம் சட்டம் (1985 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கம்)<br>• (1969 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க சட்ட ஆணைக்குழுச் சட்டம்<br>• (1978 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) சட்ட உதவிச் சட்டம்<br>• (1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க மத்தியஸ்த சபைகள் சட்டம்<br>• (1840 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) மோசடி தவிர்த்தல் கட்டளைச் சட்டம்<br>• (1957 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க) சமூக இயலாமை தவிர்த்தல் சட்டம்<br>• (1979 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க) அரசாங்க ஆரம்ப நீதிமன்ற ஏற்பாட்டுச் சட்டம்<br>• (1969 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க) அரசாங்க (சிவில் குற்றங்களுக்கான பொறுப்புக்கள்) சட்டம்<br>• (1926 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க) குற்றவியல் தவிர்த்தல் கட்டளைச் சட்டம்<br>• குவாசி நீதிமன்ற (நியமனங்களைச் செல்லுபடியாக்கல்) சட்டம் |

| திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| | • (2015 ஆம் ஆண்டின் 4 ஆம்இலக்க) குற்றமொன்றில் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சியாளர்களுக்கு உதவியளித்தல் மற்றும் பாதுகாத்தல் சட்டம்<br>• (2000 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க) இலங்கை வாணிப மத்தியஸ்த நிலையச் சட்டம்<br>• (2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க ) காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தை (தாபித்தல், நிருவகித்தல் மற்றும் அதன் பணிகளை நிறைவேற்றுதல்) சட்டம்<br>• (2018 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க) இழப்பீட்டுக்கான அலுவலகச் சட்டம் |

(4) அவ்வறிவித்தலில் இல. "4.0 புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்" எனும் தலைப்பின் கீழுள்ள "04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்" தொடர்பில் பின்வருமாறு-

04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்

| திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட, வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. பௌத்த அலுவல்கள் திணைக்களம்<br>2. இந்து மத, பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்<br>3. கிறித்தவ மத அலுவல்கள் திணைக்களம்<br>4. முஸ்லிம் சமய மற்றும் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்<br>5. கலாசார அலுவல்கள் திணைக்களம்<br>6. தேசிய நூதனசாலைத் திணைக்களம்<br>7. பகிரங்க அரங்காட்டுகைச் சபை<br>8. தேசிய சுவடிக்காப்புத் திணைக்களம்<br>9. தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்<br>10. எஸ். டப். ஆர். டி. பண்டாரநாயக்க ஞாபகார்த்த மன்றம்<br>11. ஜேஆர். ஜயவர்த்தன கேந்திர நிலையம்<br>12. நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம் | • (1990 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) புத்த சாசன நிதியச் சட்டம்<br>• (1931 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) பௌத்த அறநிலையங்கள் கட்டளைச் சட்டம்<br>• (1985 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) இந்து பண்பாட்டு நிதியச் சட்டம்<br>• (1956 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க) பள்ளிவாசல் மற்றும் முஸ்லிம் தரும நம்பிக்கைப் பொறுப்புகள் அல்லது வக்பு சட்டம்<br>• (1981 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க) எஸ். டப். ஆர். டி. பண்டாரநாயக் தேசிய ஞாபகார்த்த மன்றச் சட்டம்<br>• (1988 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க) கலாசார சொத்துக்கள் சட்டம்<br>• இலங்கை கலைச்சபை சட்டம் (1952 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க)<br>• (1973 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க) தேசிய சுவடிக்காப்புச் சட்டம்<br>• (1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க ) அரச திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டம்<br>• (1980 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க) மத்திய கலாசார நிதியச் சட்டம்<br>• (1922 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க) நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டம் |